# மாகாணக் கல்வித் திணைக்களம் – வடமாகாணம்

## இரண்டாந் தவணைப்பரீட்சை – 2018

### குடியியற்கல்வி

சுட்டெண் : ...................... தரம் - 10 நேரம் - 3 மணி

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடி (x) இடுக

## பகுதி I

01. "சனநாயக ஆட்சி அனைவரதும் உரிமைகளையும் பெற்றுக் கொள்ளும் ஆட்சி முறையாகும்." எனக்கூறியவர்.
(1) காணர் (2) ஆபிரகாம் லிங்கன் (3) சீலர் (4) லஸ்கி

02. ஒருகட்சி முறை நிலவும் நாடுகளில் ஒன்று.
(1) இலங்கை (2) பிரித்தானியா (3) ஐக்கிய அமெரிக்கா (4) கியூபா

03. இலங்கை சனநாயக சோலிச குடியரசின் அரசியல் யாப்பிற்கமைய தேர்தல் தொகுதிகளைப் பிரிப்பது?
(1) தேர்தல் திணைக்களம் (2) எல்லை நிர்ணய ஆணைக்குழு
(3) மாவட்ட செயலகம் (4) ஆட்பதிவுத் திணைக்களம்

04. "வெளித் தடைகளற்ற விதத்தில் மனிதன் தனது தனித்துவத்தை விருத்தி செய்வதற்கான நிலைமை சுதந்திரமாகும்" எனக் கூறியவர் யார்?
(1) ஜீ.டி.எச்.கோல் (2) ஜே.லஸ்கி (3) ஐவர் ஜெனிங்ஸ் (4) காணர்

05. தேசிய அரசு பலமடைவதற்கு காரணமாக அமைந்த அரசியல் சிந்தனையாளர்?
(1) பேராசிரியர்.காணர் (2) தோமஸ் ஹொப்ஸ் (3) சீ.எப்.ஸ்ட்ரோங் (4) ஏ.வி.டைசி

06. இரு வகையான அரசாங்கங்களினால் செயற்படுத்தப்படும் ஆட்சி முறை?
(1) ஒற்றையாட்சி (2) சனநாயக ஆட்சி (3) சர்வாதிகார ஆட்சி (4) கூட்டாட்சி

07. ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபை மூலம் மனித உரிமைகள் பிரகடனம் வெளியிடப்பட்ட ஆண்டு.
(1) 1958 டிசம்பர் 10 (2) 1968 நவம்பர் 10 (3) 1948 டிசம்பர் 10 (4) 1947 டிசம்பர் 10

08. இலங்கையின் தேர்தல் மாவட்டங்களின் எண்ணிக்கை.
(1) 25 (2) 14 (3) 22 (4) 21

09. தமது அரசியல் பொருளாதார மற்றும் சமூகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக தனி நபருக்கு சமூகத்தால் பெற்றுக்கொடுக்கப்படும் சந்தர்ப்பம்.
(1) உரிமை (2) சுதந்திரம் (3) ஜனநாயம் (4) வாக்குரிமை

10. ஒரு நாட்டின் அடிப்படைச் சட்டமாக அமைவது.
(1) பொதுச் சட்டம் (2) குற்றவியல் சட்டம் (3) சிவில் சட்டம் (4) அரசியல் யாப்பு



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

11. "மகிழ்ச்சிகரமானதும் கௌரவமானதுமான வாழ்க்கையை நோக்காகக் கொண்ட அமைப்பே அரசாகும்" எனும் கூற்றை முன்வைத்தவர்.
(1) அரிஸ்ரோட்டில் (2) ஜே.லஸ்கி (3) ஐவர் ஜெனிங்ஸ் (4) காணர்
12. பெரிய பிரித்தானியாவில் பெயரளவு நிர்வாகியாக விளங்குபவர்.
(1) சனாதிபதி (2) பிரதமர் (3) பிரித்தானியமுடி (4) சபாநாயகர்
13. சனநாயக சமூகமொன்றில் ஆட்சி தொடர்பான விபரங்களை மேற்கொள்வதற்கு மக்களுக்கு இருக்கவேண்டிய அதிகாரம் என அறியப்படுவது.
(1) வாக்குரிமை (2) மீயுயர் அதிகாரம்
(3) இறைமை (4) அரசியலமைப்பு அதிகாரம்
14. ஐரோப்பாவில் ஆரம்பத்தில் தோன்றிய தேசிய அரசுகள் இரண்டைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.
(1) ஸ்பெயின், இத்தாலி (2) இங்கிலாந்து, பிரான்ஸ்
(3) இங்கிலாந்து, ஜேர்மனி (4) ஒல்லாந்து, போத்துக்கல்
15. மத்திய அரசிடம் உள்ள நிர்வாக அதிகாரங்களுள் சிலவற்றை பிராந்திய நிர்வாக அலகுகளிடம் கையளித்தல்.
(1) அதிகாரப் பகிர்வு (2) அதிகாரப் பன்முகப்படுத்தல்
(3) அதிகார விரிவாக்கம் (4) சமஷ்டி முறை
16. எல்லா வகையிலும் அரசியல் அதிகாரம் ஒரு மத்திய நிறுவனத்தினுள் குவிந்திருக்கும் ஆட்சி முறை.
(1) ஒற்றையாட்சி (2) சனநாயக ஆட்சி
(3) சர்வாதிகார ஆட்சி (4) சமஷ்டி ஆட்சி
17. இந்தியாவில் சமஷ்டி ஆட்சி முறையில் பிரதேச அலகுகள் அழைக்கப்படுவது.
(1) மாவட்டம் (2) மாகாணம் (3) மாநிலம் (4) மாநகரம்
18. பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இலங்கையின் மாநகரசபை கட்டளைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.
(1) 1866 (2) 1871 (3) 1815 (4) 1865
19. இலங்கையில் மாகாண ஆளுநரை நியமிப்பவர்.
(1) சட்டமா அதிபர் (2) பிரதமர் (3) ஜனாதிபதி (4) முதலமைச்சர்
20. ஐக்கிய அமெரிக்காவில் இன்று உள்ள மாநிலங்களின் எண்ணிக்கை.
(1) 13 (2) 18 (3) 55 (4) 50
21. மாகாண அமைச்சரவையில் உள்ளடங்கும் அமைச்சுக்களின் எண்ணிக்கை முதலமைச்சர் உட்பட
(1) 4 (2) 3 (3) 5 (4) 6
22. சுவிட்சர்லாந்து அரசியல் முறையில் அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் போது பிரச்சினையான நிலைமை உருவாகுமாயின் அதனைத் தீர்க்கும் அதிகாரம் இருப்பது.
(1) தேசியசபைக்கு (2) சமஷ்டி பேரவைக்கு
(3) சமஷ்டிசபைக்கு (4) கென்ரன் நீதி மன்றத்திற்கு
23. ஐக்கிய அமெரிக்க குடியரசில் சமஷ்டியாட்சி அரசியலமைப்பிற்கிணங்க மத்திய அரசுக்குரிய அதிகாரங்கள் இரண்டுமாவன.
(1) வரிவிதிப்பும், வெளிநாட்டு வர்த்தகமும் (2) கல்வியும், சுகாதாரமும்
(3) உள்ளூராட்சியும், பெருந்தெருக்களும் (4) வீடமைப்பும், நிர்மாணமும்
24. ஓர் இனத்திற்கு ஓர் அரச முறை என உருவாகிய அரசு.
(1) கோத்திர அரசு (2)மாகாண அரசு (3) மத்திய அரசு (4) தேசிய அரசு
25. இலங்கையில் அதிகமான மாவட்டங்களைக் கொண்ட மாகாணம்.
(1) மத்திய மாகாணம் (2) வடமாகாணம் (3) தென்மாகாணம் (4) கிழக்கு மாகாணம்
26. கி.மு 6ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் ஆரியக் குடியேற்றத்தில் குழுவாட்சி காணப்பட்ட இடம்.
(1) வஜ்ஜி (2) கோசலை (3) அவந்தி (4) மகதம்



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

27. இலங்கையில் மத்திய அரசு மாகாணசபை இவ்விரண்டுக்கும் பொதுவான அதிகாரங்கள்.
(1) I வது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளது (2) III வது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளது
(3) II வது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளது (4) மேற்கூறிய யாவும் சரியானவை

28. அதிகாரப் பன்முகப்படுத்தல் நடவடிக்கை மூலம் 1987இல் இலங்கையில் உருவாக்கப்படாதது.
(1) மாநகரசபை (2) பிரதேசசபை (3) கிராமசபை (4) நகரசபை

29. அரச கொள்கைத் தீர்மானம் மற்றும் அதனைச் செயற்படுத்தல் என்பவற்றுடன் தொடர்புடைய செயற்பாடாக அமைவது.
(1) சர்வாதிகாரஆட்சி (2) கூட்டாட்சி (3) நல்லாட்சி (4) ஓற்றையாட்சி

30. "குறியீட்டு ரீதியாக சமூகம் உரித் தாக்கிக் கொண்டுள்ளதும் பாரம்பரியமாக தமதாக்கிக் கொண்டுள்ளதுமான சகலவிதமான நடத்தைக் கோலங்களுக்கும் வழங்கக் கூடிய கூட்டான பெயரே பண்பாடாகும்" எனக் கூறியவர்.
(1) T.B டெயிலர் (2) A. எல்வூட் (3) ஊ.கூ ஹீலர் (4) காணர்

31. பன்மைக் கலாசார சமூக இயல்பினைக் கொண்டிராத நாடு
(1) இலங்கை (2) இந்தியா (3) சுவிட்சர்லாந்து (4) இஸ்ரேல்

32. இலங்கையின் பன்மைப் பண்பாட்டுச் சமூகம் உருவாவதில் செல்வாக்குச் செலுத்தும் குடிப்பெயர்வு தொடர்பான காரணியாக அமைவது.
(1) பண்டுவாசுதேவனும் குழுவினரும் வருகை தந்தமை (2) சேனன் குத்திகள் வருகை
(3) பண்டு பாரிந்த குழுவினரின் ஆக்கிரமிப்பு (4) கலிங்க மாகனின் ஆக்கிரமிப்பு

33. சுவிட்சர்லாந்தின் கென்ரன்களுக்குரிய அதிகாரமாக அமைவது.
(1) வெளி விவகாரம் (2) கல்வியும் உயர் கல்வியும்
(3) தகவல் பரிமாற்றம் (4) பாதுகாப்பு மற்றும் இராணுவ நடவடிக்கை

34. பிரதேச சபையின் தலைவர் அழைக்கப்படுவது.
(1) நகர பிதா (2) செயலாளர் (3) முதலமைச்சர் (4) தலைவர்

35. ஐரோப்பாவில் நிலமானிய சமுதாய அமைப்பு முறை நிலவிய காலப்பகுதி
(1) கி.பி 10 – கி.பி 15 ம் நூற்றாண்டு வரையான காலப்பகுதி
(2) கி.பி 5 – கி.பி 15 ம் நூற்றாண்டு வரையான காலப்பகுதி
(3) கி.பி 15 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர்
(4) கி.பி 15 – கி.பி 20ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதி

36. கி.பி 1688 இல் ஏற்பட்ட புரட்சி
(1) பிரான்சியப் புரட்சி (2) ரஷ்யப் புரட்சி (3) ஆங்கிலப் புரட்சி (4) சீனப்புரட்சி

37. நவீன சனநாயகத்தின் தாயகமாகக் கருதப்படுவது
(1) கிரேக்கம் (2) இங்கிலாந்து (3) இந்தியா (4) பிரான்ஸ்

38. அரசினது இயல்புகளாக அமைவது
(1) மக்கள் தொகை, சட்டத்துறை (2) அரசாங்கம், இறைமை
(3) நிலம், நீதித்துறை (4) நீதித்துறை, சட்டத்துறை

39. "அரசின் அல்லது மக்களின் விருப்பங்களைக் கொள்கைகளாக மாற்றுவதன் மூலம் அவற்றை நடைமுறைக்குக் கொண்டு வரும் பிரதிநிதி"
(1) அரசு (2) சனாதிபதி (3) பிரதமர் (4) அரசாங்கம்

40. இலங்கைக்கு சர்வசன வாக்குரிமையை வழங்கிய அரசியல் யாப்பு
(1) கோல்புறூக் சீர்திருத்தம் (2) டொனமூர்சீர்திருத்தம்
(3) சோல்பரி யாப்பு (4) முதலாம் குடியரசு யாப்பு



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

## பகுதி II

- **முதலாம் வினா கட்டாயமானது. முதலாம் வினாவிற்கும் வேறு நான்கு வினாக்களுக்கும் விடை எழுதுக.**

01. I. கிரேக்கத்தில் ஆட்சி உரிமை மறுக்கப்பட்டவர்களில் இரு பிரிவினரைக் குறிப்பிடுக.
    II. சனநாயகத்தின் இரண்டு வகைகளையும் குறிப்பிடுக.
    III. அரசின் பிரதான வகைகள் இரண்டையும் குறிப்பிடுக?
    IV. பிரஜைகளின் பிரதான கடமைகளின் இரு வகைகளையும் குறிப்பிடுக?
    V. ஒற்றையாட்சி என்பதனை வரையறை செய்க.
    VI. சமஷ்டி அரசொன்று வெற்றி பெறுவதற்கான இயல்புகள் இரண்டினைக் குறிப்பிடுக?
    VII. நல்லாட்சியின் அடிப்படைப் பண்புகள் இரண்டை எழுதுக?
    VIII. சட்ட ஆட்சியின் நடைமுறைப் பண்புகள் இரண்டைக் குறிப்பிடுக?
    IX. அரசாங்கத்தின் இரு துறைகளினைக் குறிப்பிடுக?
    X. பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தின் சிறப்பான செயற்பாட்டிற்கு பிரஜையொருவர் விருத்திசெய்ய வேண்டிய பண்புகள் இரண்டைக் குறிப்பிடுக?

(10 x 2 = 20 புள்ளிகள்)

02. I. நேரடி சனநாயக முறையினைத் தற்காலத்தில் நடைமுறைப்படுத்துவதில் உள்ள சவால்கள் இரண்டு எழுதுக?
    II. சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலின் பண்புகள் மூன்று எழுதுக?
    III. சனநாயகம் ஆட்சி முறையின் பண்புகள் மூன்றினைக் குறிப்பிட்டு ஒன்றை விளக்குக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

03. I. அரசின் இயல்புகள் இரண்டினைக் குறிப்பிடுக.
    II. தேசிய அரசின் பிரதான பண்புகள் மூன்றினைக் குறிப்பிடுக.
    III. தேசிய அரசின் தோற்றத்திற்கு வழிவகுத்த காரணிகள் மூன்றினைக் குறிப்பிட்டு ஒன்றை விளக்குக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

04. I. பாராளுமன்ற அரசாங்க முறையின் பண்புகள் இரண்டினைக் குறிப்பிடுக?
    II. சனாதிபதி அரசாங்க முறையின் விசேட பண்புகள் மூன்றினைக் குறிப்பிடுக?
    III. சனநாயக ஆட்சிமுறை வெற்றி பெற அவசியமான காரணிகள் மூன்றினைக் குறிப்பிட்டு ஒன்றை விளக்குக?

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

05. I. ஒற்றையாட்சி முறையின் பொதுவான பண்புகள் இரண்டினைக் குறிப்பிடுக.
    II. சமஷ்டி ஆட்சி முறையின் அனுகூலங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.
    III. சுதந்திரத்தின் பின்னர் அதிகாரப் பரவலாக்கம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை சுருக்கமாக விளக்குக?

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!

06. I. மாகாண சபை ஒன்றின் நிறுவனக் கட்டமைப்பில் காணப்படும் பிரதான அலகுகள் இரண்டினைக் குறிப்பிடுக.

II. மாகாண ஆளுநரின் அதிகாரங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

III. 1978 அரசியல் யாப்பின் 13ஆம் சீர்திருத்தத்தின் படி அதிகாரங்கள் வகுக்கப்பட்ட முறையினை மூன்று நிரல்களினூடாகக் காட்டி அதில் ஒன்றை விளக்குக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

07. I. பன்மைப் பண்பாட்டு சமூகத்தின் அடிப்படைப் பண்புகள் இரண்டினை எழுதுக.

II. பன்மைப் பண்பாட்டு சமூகத்தில் மக்கள் ஒற்றுமையுடன் செயற்படுவதனால் கிடைக்கும் நன்மைகள் மூன்று எழுதுக.

III. இலங்கையில் பன்மைப் பண்பாட்டுச் சமூகம் உருவாவதில் செல்வாக்குச் செலுத்தும் மூன்று காரணிகளைக் குறிப்பிட்டு ஒன்றை விளக்குக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk